ஆண்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டு, 5 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே திட்டம் உருவாக்கப்பட்டு, கடந்த 11 ஆண்டுகளாக எண்ணி எண்ணிப் பார்த்து, திருத்தி, திருத்திப்பார்த்து, பல ஆட்சிகள் இதனைக் கண்டிருக்கின்றன. இது அவர்கள் பெற்றெடுத்தக் குழந்தை. எனவே, இது வாழாது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) 11 ஆண்டுகளாக இதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் மற்ற விவரங்களைச் சேகரித்துத் தரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவரவர்களே, சென்னை மாநகரில் நாள்தோறும் எடுத்துக் கொண்டிருக்கிற குப்பைகளை வைத்து இந்த உரத் தொழிற்சாலையைத் தொடங்க முதலிலே என் தொகுதியில் அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னால், இது வேளச்சேரிக்கு மாற்றப்பட்டது. குப்பையைக் கொட்டக் கூட இடம் இல்லாத நிலையில் அரசு மறுபரிசீலனை செய்து, இந்தத் தொழிற்சாலையைத் தொடங்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அடிப்படையில் குப்பைகள் இன்றைக்குத் தீவிரமாக அழிக்கப்பட வேண்டியவை என்பதிலே இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கிறது. இதற்கு வேறு வகையிலே தீவிரமாக அரசு தீர்வு காண இருக்கிறது.

### தஞ்சாவூர் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்

5—(*வினா எண். 9145)— திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் உள்ள தஞ்சாவூர், ஒரத்தநாடு போன்ற பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து புதிய ஈச்சங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தஞ்சாவூர், ஒரத்தநாடு ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களையும் பிரித்து ஈச்சங்கோட்டை என்கின்ற புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க கோரிக்கை வந்துள்ளது.

(ஆ) தஞ்சை மாவட்ட ஆட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோரின் செயற்குறிப்பு பெற்றபின் அரசு தக்க முடிவு எடுக்கும்.

1987 மார்ச் 2]

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டிலேயே அதிகமான ஊராட்சிகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிற தஞ்சை ஒரத்தநாடு ஒன்றியங்களை—ஏறத்தாழ 61 ஊராட்சிகளை ஒவ்வொரு ஒன்றியமும் உள்ளடக்கியிருப்பதால், புதுக்கோட்டையில் இருக்கிற காவேரி, வெண்ணாறு, புதுக் கால்வாய் பாசனம் பெறாத 40 ஊராட்சிகளை—தனியாக பிரித்து ஒரு ஒன்றியத்தை அமைத்தால், எப்போதுமே வறட்சி யாக இருக்கிற பகுதி தனியாக இருக்கும் என்பதால் பலவகை களில் பயன்பட வழியிருக்கிறது. ஆகவே, துரிதமாக நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைப் பிரித்துத் தரு வார்களா என்று அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை கிடைத்தவுடன் துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் இன்றைக்கு மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படக் கூடிய அளவுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படை யில், தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய, அதிகமான பஞ் சயத்துக்களைக் கொண்டிருக்கிற யூனியன்களை இரண்டாக வோ, மூன்றாகவோ பிரிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரி சீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது அந்தப் பகுதி யிலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டு மென்று அங்கே இருக்கின்ற மக்கள் கேட்டுக் கொண்டால், அவை பரிசீலிக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஒன்றியங் களைப் பற்றிய கேள்வி. மாநிலத்திலே இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் இருக் கின்றன. அதேபோல், ஊராட்சிப் பகுதிகள் பிரிக்கப்பட வேண்டு மென்ற கோரிக்கைகளும் இருக்கின்றன. எனவே, மாநிலம் முழுவதும் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிப் பகுதிகளைப் பற்றிய ஆய்வு நடத்தி, முறையாகப் பிரிப்பதற்கு ஒரு குழுவை நியமிப்பதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனை. விரைவிலே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, ஊராட்சி ஒன்றியங்களை பிரிப்பதற்கு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் வேண்டுகோள் விடுத்தால் பரிசீலிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, அரசு அதனை அமுல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லுகின்றபோது, உடன்பாடான பதிலைத் தான் சொன்னேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அரசு பதிவுரு எழுத்தர் மற்றும் ஆய்வக உடனாட்கள் பதவி உயர்வு.**

1.—(*வினா எண். 9726)—**திரு. செ. செம்மலை** : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத் துறைகளில் பணிபுரிந்து வரும் பதிவுரு எழுத்தர்கள் (Record Clerks) மற்றும் ஆய்வக உடனாட்கள் (Lab Attenders) பதவி உயர்வு கேட்டு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. செ. செம்மலை** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அரசுக்கு கோரிக்கை வைத்ததுபோல், அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவிற்கும் கோரிக்கை வைத்திருந்தார்கள். அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு இது குறித்து பரிந்துரை வழங்கியிருக்கிறதா ? அந்தப் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு உள்ளதா ? இந்த விவரங்களை நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.